## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 1-7 - அங்கண் ஞாலம்
## (சிங்கவேள் குன்றம்)

1008 * அங்கண் ஞாலம் அஞ்ச * அங்கோர் ஆளரியாய் * அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால் * போழ்ந்த புனிதனிடம் **
பைங்கண் ஆனைக் கொம்பு கொண்டு * பத்திமையால் * அடிக் கீழ்ச்
செங்கணாளி இட்டிறைஞ்சும் * சிங்கவேள்[1] குன்றமே 1

1009 அலைத்த பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோளரியாய் * அவுணன்
கொலைக் கையாளன் நெஞ்சிடந்த * கூருகிராளனிடம் **
மலைத்த செல் சாத்தெறிந்த பூசல் * வந்துடிவாய் கடுப்ப *
சிலைக் கை வேடர் தெழிப்பறாத * சிங்கவேள்[2] குன்றமே 2

1010 ஏய்ந்த பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோளரியாய் * அவுணன்
வாய்ந்த ஆகம் வள்ளுகிரால் * வகிர்ந்த அம்மானதனிடம் **
ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும் * அன்றியும் நின்றழலால் *
தேய்ந்த வேயும் அல்லதில்லாச் * சிங்கவேள்[3] குன்றமே 3

1011 எவ்வம்[4] வெவ்வேல் பொன் பெயரோன் * ஏதலன் இன்னுயிரை
வவ்வி * ஆகம் வள்ளுகிரால் * வகிர்ந்த அம்மானதிடம் **
கவ்வு நாயும் கழுகும் * உச்சிப் போதொடுகால் சுழன்று *
தெய்வம் அல்லால் செல்ல ஒண்ணாச் * சிங்கவேள்[5] குன்றமே 4

1012 மென்ற பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோளரியாய் * அவுணன்
பொன்ற ஆகம் வள்ளுகிரால் * போழ்ந்த புனிதனிடம் **
நின்ற செந்தீ மொண்டு சூறை * நீள் விசும்பு ஊடிரிய[6] *
சென்று காண்டற்கரிய கோயில் * சிங்கவேள்[7] குன்றமே 5

1013 எரிந்த பைங்கண் இலங்கு பேழ் வாய் * எயிற்றொடு இது எவ்வுருவென்று *
இரிந்து வானோர் கலங்கி ஓட * இருந்த அம்மானதிடம் **
நெரிந்த வேயின் முழையுள் நின்று * நீள் நெறிவாய் உழுவை *
திரிந்த ஆனைச் சுவடு பார்க்கும் * சிங்கவேள்[8] குன்றமே 6

---
[1] சிங்கவேழ்
[2] சிங்கவேழ்
[3] சிங்கவேழ்
[4] எவ்வும்
[5] சிங்கவேழ்
[6] ஊடெரிய
[7] சிங்கவேழ்
[8] சிங்கவேழ்

1014 முனைத்த சீற்றம் விண் சுடப் போய் * மூவுலகும் பிறவும் *
அனைத்தும் அஞ்ச ஆளரியாய் * இருந்த அம்மானதிடம் **
கனைத்த தீயும் கல்லும் அல்லா * வில்லுடை வேடருமாய் *
தினைத்தனையும் செல்ல ஒண்ணாச் * சிங்கவேள்[9] குன்றமே 7

1015 நாத்தழும்ப நான்முகனும் * ஈசனுமாய் முறையால்
ஏத்த * அங்கோர் ஆளரியாய் * இருந்த அம்மானதிடம் **
காய்த்த வாகை நெற்றொலிப்பக் * கல்லதர் வேய்ங்கழை போய் *
தேய்த்த தீயால் விண் சிவக்கும் * சிங்கவே1ள்[10] குன்றமே 8

1016 நல்லை[11] நெஞ்சே! நாம் தொழுதும் * நம்முடை நம்பெருமான் *
அல்லி மாதர் புல்க நின்ற * ஆயிரந்தோளனிடம் **
நெல்லி மல்கிக் கல்லுடைப்பப் * புல்லிலை ஆர்த்து * அதர்வாய்ச்
சில்லு சில்லென்றொல்லறாத * சிங்கவேள்[12] குன்றமே 9

1017 * செங்கணாளி இட்டிறைஞ்சும் * சிங்கவேள்[13] குன்றுடைய *
எங்கள் ஈசன் எம்பிரானை * இருந்தமிழ் நூற்புலவன் **
மங்கையாளன் மன்னு தொல் சீர் * வண்டறை தார்க் கலியன் *
செங்கையாளன் செஞ்சொல் மாலை * வல்லவர் தீதிலரே 10

**அடிவரவு:** அங்கண் அலைத்த ஏய்ந்த எவ்வம் மென்ற எரிந்த முனைத்த
நா நல்லை செங்கண் கொங்கு

---

[9] சிங்கவேழ்
[10] சிங்கவேழ்
[11] நல்ல
[12] சிங்கவேழ்
[13] சிங்கவேழ்